# THE CONVERSATION.

[A dialogue between a Christian and a follower of Mohammed, showing that the Koran contains many absurdities and inconsistencies—is impure in its tendency—and cannot be received as a revelation from God.]

கிறிஸ்தவனுக்கும் இஸ்லாமார்க்கத்தானுக்குமுள்ள

# சமவாதம்.

அல்லாவேயன்றி வேறுதெய்வமில்லை அவரே என்றுமுள்ளவருந் தாமாய் இருப்பவருந் தூக்கமும் நித்திரையுமின்றி வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லாவற்றையுமுடையவருமாயிருக்கிறார் அவரிடத்திலே பரிந்து பேசத்தக்கவன் யாவன் என்று கோருனில் இரண்டாம் அதிகாரத்திற் சொல்லப்படுகின்றது.

கிறி. சாய்புவே உங்கள் மார்க்கத்தின்படி முக்கியமாய் அறியவேண்டியதென்ன?

இஸ். தனிக்கடவுளாகிய அல்லாவையும் அவர் நியமித்த பெரிய நபியாகிய மகம்மதுவையும் அறியவேண்டும்.

கிறி. மகம்மது அல்லாவினால் நியமிக்கப்பட்ட பெரிய நபியென்று விளங்கியதெப்படி?

இஸ். ஈசாநபி, எனக்குப் பின்னாகத் தேற்றரவர் வருவாரென்று இவருடைய வருகையை

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA, [3,000
1844.

முன்னறிவித்திருந்ததினாலும் மகம்மது அற்புதஞ்செய்து தாம் ஒரு நபியென்று அறிவித்ததினாலும் விளங்குகிறது.

கிறி. ஈசாநபி, தமது சீஷருடைய இருதயங்களைத் தேற்றும்படி தேற்றரவரை அனுப்புவோமென்று சொன்னதேயன்றி மகம்மது என்னும் நபி ஒருவர் வருவாரென்று சொன்னதில்லையே, மகம்மது நபி வந்து அவருடைய சீஷரைத் தேற்றினதுமில்லை. ஆகையால் அவர் குறித்தது இவரையல்லவென்று விளங்குகிறது. இது நிற்க மகம்மது செய்த அற்புதம் என்ன?

இஸ். அவர் அமவாசியிலே சந்திரமண்டலத்திற் போய்ச் சந்திரனிற் பாதியைப் பூமியிற் கொண்டு வந்தார். அதுவுமன்றி வேறு அற்புதங்களையுஞ் செய்ததுண்டு.

கிறி. சந்திரனிற் பாதியைப் பூமிக்குக் கொண்டுவந்ததென்று அவர் சொல்ல அறிந்ததன்றி ஒருவருங் கண்டதில்லையே. இவர் உண்மையாக அற்புதஞ் செய்யக்கூடியவராயிருந்தால் ஈசாநபி, முதலிய சில நபிமார் செய்ததுபோல எவர்களும் அறியப் பிரத்தியட்சமாகப் பிறவிக்குருடனுக்குக் கண்கொடுத்துச் செத்தவர்களை எழுப்பி இவ்விதமாய் மனிதருக்கு நன்மையுங் கடவுளுக்கு மகிமையுமான அற்புதங்களைச் செய்யவேண்டும் அப்படிச் செய்யாததென்ன?

இஸ். மக்கத்தார் உமது வேதத்தை நாங்கள் நம்ப நீர் அற்புதஞ்செய்யவேண்டுமென்ற

பொழுது நான் கோறானைப் போதிப்பதற்கே யன்றிப் புதுமை செய்ய நியமிக்கப்படவில்லை யென்று சொன்னார். அப்படி அவருடைய போதகமே போதியதாய் இருந்ததினால் மிகுதியும் அவர் அற்புதஞ் செய்யவில்லை.

கிறி. மகம்மதுவின் வாக்கினாலேயும் அவர் அற்புதஞ் செய்ய நியமிக்கப்படவில்லையென்றதினால் அற்புதஞ் செய்யக்கூடியவரல்லவென்று விளங்குகிறது. இது நிற்க அவரை விட வேறு நபிமார் வேறுசமயங்களைக் கொடுக்கவில்லையோ?

இஸ். முன்னே ஆதாம் சேத் எனோக் ஆபிரகாம் நூறு ஆகமங்களைக் கொடுத்தார்கள். அவைகள் இப்பொழுதில்லை. பின்பு மூசாநபி தபுறேத்தென்கிற ஆகமத்தையுந் தாவீதுநபி சபூர் என்கிற ஆகமத்தையும் இசாநபி இஞ்சில் என்கிற ஆகமத்தையுங் கொடுத்தார்கள். அவைகள் அல்லாவுடைய சித்தத்தின்படியே அந்த அந்தக் காலத்துக்கென்றே நியமிக்கப்பட்டிருந்தன. பின்பு மனிதர்கள் அவைகளைத் தாறுமாறாக்கினதினாலே மகம்மது கோறானென்னும் நிலையுள்ள ஆகமத்தைக் கொடுத்து அதைப் போதித்தார்.

கிறி. இந்தக் கோறானை மகம்மது பெற்றதெப்படி?

இஸ். அவர் அல்லாவினாலே ஏவப்பட்டு ஒரு மலைக்குகைக்குள்ளே போய் அங்கே காபிரியேல் என்னுந் தேவதூதனிடமாக அதைப் பெற்றார்,

கிறி. அதை அவர் அவனிடத்திற் பெற்றதெ
ன்று நம்புவதெப்படி?

இஸ். கோறுன் இன்பமும் அலங்காரமும் உ
டையதாய் இருக்கையாலும் பெரிய மகம்ம
துநபி தாங் காபிரியேலிடத்திற் பெற்றுக்கொ
ண்டதென்று தமது வாக்கினுற் சொன்னதினு
லும் நம்பலாம்.

கிறி. கோறுன் வேதம் விக்கிரகபத்திக்காரரு
டைய சித்தின்பப்பாடல் போலத் துரிச்சையு
ள்ள மனிதருடைய சிந்தைக்கேடன்றி அல்லா
வின் சித்தத்துக்கு இசையாததினுலே காபிரி
யேலிடத்திற் பெற்றதென்று நம்ப இடமில்லை.
இது நிற்க அல்லாவினுலே ஏவப்பட்டு மூசாந
பி தாவீதுநபி இசாநபி முதலிய நபிமார் கொ
டுத்த வேதத்திற் சொல்லப்பட்ட மோட்சபோ
கங்களுக்கு வித்தியாசமாகவும் சகல மதானுசா
ரிகளுடைய சித்தத்துக்கு ஒவ்வாமையாகவும்
கோறுனிலே மோட்சபோகம் பலவித இரசவ
ஸ்துக்களைப் புசித்து ரூபயௌவனமுள்ள ப
ல ஸ்திரிகளுடனே போகித்து சந்தோஷிப்ப
தே மோட்சானுபோகமெனக்குறித்திருக்கை
யாற் கோறுன் நம்பப்படத்தக்கதல்ல.

மேலும் அல்லா அத்திப்பழத்தைக்கொண்
டு சீனுமலையிலே சத்தியம் பண்ணினுரென்று
ம் சாலமோன் என்னும் இராசாவுக்குப் பட்சி
களும் பேய்களும் படைச்சேனைகளாயிருந்த
னவென்றும் சேபாவென்னுந் தேசத்தின் இ
ராசாத்தியுடைய செய்தியை ஒரு பட்சி சால
மோனுக்கு அறிவித்ததென்றும் சமாரியர் யூ

தர் கிறிஸ்தவர்கள் கோறானை நம்பாதிருந்தும்
அல்லாவுண்டென்றும் உயிர்த்தெழுதல் உண்
டென்றும் நம்புவதினால் அவர்கள் பரதீசிலே
சேருவார்களென்றும், வேறோரிடத்திலே கோ
றானை நம்பாதவர்கள் நரகத்திலே விழுவார்க
ளென்றும், யூதர் இசாநபியைக் கொல்லவந்த
பொழுது அல்லா அவருடைய சிஷரில் ஒருவ
னை அவரைப்போலக் காட்டி அவரைச் சரீரத்
துடனே வானத்திற் சேர்த்துக்கொண்டாரெ
ன்றும், வேறோரிடத்தில் அவர் மனிதரைப்
போல மரணம் அடைந்தாரென்றும், ஒரு இட
த்துக்கு ஒரு இடம் வேற்றுமையாக வெகு கா
ரியங்கள் சொல்லப்படுகையால் அதை நம்புவ
து முறையல்ல.

இஸ். கோறான் வேதத்தை அந்நிய இராசா
க்களும் பெரியோர்களும் எற்றுக்கொண்டது
ம் மகம்மது இருக்குங் காலத்திற்றானே அது
உலகத்திற் சீக்கரமாய்ப் பரம்பினதும் அல்லா
விடத்திலே வந்த வேதமென்பதற்கு ஒரு அத்தா
ட்சியல்லவா.

கிறி. மகம்மது மார்க்கம் மனிதருக்குச் சு
பாவமாயுள்ள நகாத இச்சைப்படியே அவர்க
ள் நடக்கக் கற்பிக்கையாலும் அந்த வேதத்தை
எற்றுக்கொண்டவர்கள் பரதீசிலே சிற்றின்ப
ங்களையே அனுபவிப்பார்களென்று அதிலே
சொல்வதினாலுங் கெட்ட இச்சையுள்ள அநே
கர் அதை எற்றுக்கொள்வார்கள். மகம்மது
சகலரும் அதை எற்றுக்கொள்வார்களென்று நி
னைத்து இந்த வேதத்தை எற்றுக்கொள்ளும்ப

டி ஒருவரையும் பலபந்தம் பண்ணமாட்டேனென்று சொல்லி அதைப் போதித்தபொழுது அவருடைய வீட்டாரும் இனத்தாரிற் சிலருந் தவிர மற்றொருவரும் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவரைக் கொன்றுபோட நினைத்ததை அவர் அறிந்து தாம் இருந்த மெக்காப் பட்டினத்தை விட்டு ழிரேனேப்பட்டினத்துக் கோடிக் கோறுனைத் தாபிக்கும்படி யுத்தம்பண்ண அல்லாவிடத்தில் உத்தரவு பெற்றேனென்றும் அந்த யுத்தத்திலே இறந்தவர்கள் எவ்விதமான பாவத்தையும் நீங்கிப் பரதீசிலே சேர்ந்து சந்தோஷம் அடைவார்களென்றுங் கோறுனில் எழுதிக்கொண்டு அங்கே சிலரைத் தமக்குப் படைகளாகச் சேர்த்துக்கொண்டு கோறுனை ஏற்றுக்கொள்ளாதவர்களைக் கொன்று இவ்விதமாகவே அதைத் தாபித்ததினால் அந்தக் கோறான் தாபிக்கப்பட்டு உலகத்திலே பரம்பினது அத்தாட்சியல்ல.

இஸ. மகம்மது அல்லாவுக்கு உகந்த பெரியவராயும் அல்லாவிடத்தில் நமக்சாகப் பரிந்து பேசி நம்மையும் அல்லாவையும் ஒப்புரவாக்குகிறவராயுமிருக்கையில் அவர் கொடுத்த வேதத்தைப் பொய் வேதமென்று சொல்லலாமா?

கிறி. மகம்மது விக்கிரக ஆராதனையும் வியாபாரத் தொழிலும் உடையவராய் அரபுதேசத்திலே இருந்து பின்பு அவைகளை விட்டு யூத மார்க்கத்திலுங் கிறிஸ்துமார்க்கத்திலுஞ் சில் காரியங்களைத் தெரிந்தெடுத்துத் தமது பு

த்தியினாலுஞ் சில வற்றை உண்டுபண்ணிச் சே
ர்த்துக்கொண்டு தாம் அல்லாவினால் நியமிக்க
ப்பட்ட நபியென்று சொல்லிச் சனங்களைச்
சேர்த்துக்கொண்டு அநேக வியாபாரிகளுடை
ய உடைமைகளைக் கொள்ளையிட்டுக் கத்தியினா
லே அநேகரைச் செயங்கொண்டு மிகுந்த மோ
கவிகாரத்துடனே ஒன்பது ஸ்திரிகளை மனை
யாட்டிகளாகவும் நாற்பது ஸ்திரிகளை வைப்பா
ட்டிகளாகவும் வைத்துக்கொண்டதுமன்றி எ
கிப்த்திலே பிடிக்கப்பட்ட ஒரு அடிமைப்பெ
ண்ணுடனே களவாகக் கூடியிருந்ததைப், பெ
ண்டாட்டிகளில் ஒருத்தி அறிந்து கோபிக்க இ
னி அப்படிச் செய்யமாட்டேனென்று சத்தி
யம் பண்ணியும் அவள் மேற்கொண்ட இச்சை
அடங்காமல் சத்தியத்தை மறுத்து அவளைச்
சேர்த்துக்கொள்ளும்படி அல்லாவினால் உத்த
ரவு கிடைத்ததென்று சொல்லி வெளியரங்க
மாய்ச் சேர்த்து வைத்துக்கொண்டு இன்னும்
அநேக துற்கிரியைகளைச் செய்து வந்ததேய
ன்றி நன்மை செய்யாததினாலும் அல்லா அரு
ளிய வேதத்தைப் புரட்டித் தாம் உண்டாக்
கிய வேதத்தை நிறுத்தினதினாலும் அல்லாவி
ன் கட்டளைக்கு எதிரிடையாகக் கொலை களவு
விபசாரம் முதலிய பாதகங்களைச் செய்ததி
னாலும் அல்லாவின் சமுகத்தில் அவர் பாவி
யாய்க் காணப்பட்டு அவருடனே ஒப்புரவில்
லாமற் குற்றவாளியாய்த் தீர்க்கப்படுவதேயன்
றி நமக்காகப் பரிந்து பேசி நம்மையும் அல்லா
வையும் ஒப்புரவாக்குவதற்குக் கூடியவரல்ல,

மேற்சொல்லிவந்த நியாயங்களினாலே மகம்மது அல்லா நியமித்த நபியல்லவென்பதும் அவர் யாதொரு அற்புதஞ் செய்யவில்லையென்பதுங் கோறானை அவர் காபிரியேலிடத்திற் பெறவுமில்லை, அல்லா கொடுக்கவுமில்லையென்பதுங் கோறானிலே அல்லாவுடைய வசனமாகிய பழய ஏற்பாட்டுக்கு இணங்காமையான வெகு காரியங்கள் சொல்லப்படுகின்றனவென்பதுங் கோறான் ஒரு இடத்துக்கு ஒரு இடம் வேற்றுமைப்படுகின்றதென்பதுங் கோறான் பரம்பினவிதம் அது உண்மையென்பதற்குத் திட்டாந்தம் அல்லவென்பதும் மகம்மது அல்லாவுக்கு விரோதமாகக் கொடிய பாவங்களைச் செய்ததினால் அல்லாவால் ஆக்கினைப்படுவதேயன்றி அல்லாவையும் நம்மையும் ஒப்புரவாக்கத் தகாதவரென்பதுந் தெளிவாய் விளங்குகிறது.

ஆகையினாலே கோறானிலே சொல்லப்பட்ட ஓதல் நீராடல் தருமங்கொடுத்தல் நோன்புபிடித்தல் மக்கத்துக்குப் போய் அச்சுச்செய்தல் என்னும் இவ்வைந்து முறைகளினாலே பாவந் தீர்ந்து பரதீசிலே சேரலாமென்ற நம்பிக்கையை விட்டு அல்லா அருளிய மெய்வேதமாகிய பழய புதிய ஏற்பாடுகளின்படி நின்று பரதீசிலே சேர விரும்புவதே ஆத்தும ஈடேற்றத்துக்கு வழி.

இஸ். மகம்மது அருளிய கோறானேயன்றி மற்றும் நபிகள் அருளிய வேதங்களெல்லாந் தலை தடுமாறிப்போயினவென்று எங்கள் பெ

ரியோர்கள் சொல்லுகிறார்களே. பின்னைப் ப
ழைய புதிய ஏற்பாடுகளை எப்படி ஏற்றுக்கொள்
ளலாம்?

இறி. தபுறேத்து என்னும் ஆகமத்தை யூத
ர் முன்னே ஆசரிப்பின் கூடாரங்களிலும் பின்
பு தேவாலயத்திலும் பெட்டகங்களிலே வைத்
துக்கொண்டு நியமித்த காலங்களில் ஆசாரியர்
மாத்திரம் எடுத்து வாசித்துக் காட்டுவதேயன்
றி மற்றும் யூதர் கையிலே தொடவும்படா
தென்று பயபத்தியுடனே பத்திரப்படுத்தினா
ர்கள். அதில் ஒரு அட்சரக்காலெங்கிலும் ஒ
ரு சுழியெங்கிலுங் கூட்டவுங் குறைக்கவும்
வேண்டாமென்று கட்டளையுமாயிருந்தது.
இவ்விதமாகப் பத்திரப்படுத்தி இருந்த புத்த
கத்திலே ஒரு எழுத்தெங்கிலுங் கூட்டவுங் கு
றைக்கவும் மாட்டார்கள்.

கிறிஸ்துநாதர் வருமுன்னே தோலோமே
என்னும் இராசாக் கல்விமான்களாக எழுபது
பேரைக்கொண்டு அந்த ஆகமங்களைக் கிரேக்
கப்பாஷையிலே திருப்புவித்தபொழுது பல
பல புத்தகங்களையும் ஒத்துப்பார்த்துத் திரு
ப்பினார்கள். அவர்களும் பிழையுள்ளதைக் க
ண்டால் தள்ளிப்போடுவார்கள்.

பின்பு மகம்மது பிறக்க வெகுகாலத்துக்கு
முன்னே பலபாஷையிலும் பழைய புதிய ஏற்
பாடுகள் திருப்பப்பட்டுப் பல சாதியார் கை
யிலும் இருந்தன. அப்படி உலகத்திற் பரம்
பி இருக்கும் புத்தகங்களை எல்லாம் ஒருவன்
தாறுமாறாக்கிப் போடக்கூடாது. அவைகளி

ல் யாதொன்றிலே பிழை கண்டால் மற்றும் புத்தகங்களுடனே ஒத்துப்பார்த்துத் திருத்திப்போடுவார்கள்.

அதுவுமன்றி அல்லாவாலே நியமிக்கப்பட்ட நபிகளென்று நீங்களும் அறிந்திருக்கிற மூசாநபி முதலானவர்கள் கொடுத்த ஆகமங்கள் தள்ளப்பட்டுப் போகிறவைகளாய் இருந்தால் அவைகள் அல்லாவின் சித்தத்தின்படி கொடுக்கப்பட்ட ஆகமமல்லவென்று எண்ணவேண்டும். அவைகள் அக்காலத்துக்கு ஆகும். பிற்காலத்துக்கு ஆகாதென்று சொல்லுகில் ஒரு தன்மையுடைய அல்லா காலத்துக்குக் காலம் வேற்றுமைப் படுகிறவரென்று சொல்லுகிறதாம். ஆகையினால் அவைகளைக் கொடுப்பித்த அல்லாவைப் போல அவைகள் எப்பொழுதும் ஒருதன்மையாயும் நன்மையாயும் இருக்கின்றனவென்று நினைக்கவேண்டும்.

இசாநபி அருளிச் செய்த இஞ்சில் என்கிற ஆகமம் பலபல பாஷையிலேயும் எழுதப்பட்டு யூதருக்குள்ளேயும் மற்றுந் தேசத்தாருக்குள்ளேயும் பரம்பி அநேகர் கையில் இருக்கையில் ஒருவன் அவைகளிலே யாதொன்றைக் கூட்டவுங் குறைக்கவுங் கூடியதல்ல.

அதுவுமல்லாமல் இசாநபி என்னுடைய வசனங்களில் ஒன்றைக் கூட்டவுங் குறைக்கவும் படாதென்று கற்பித்திருக்கையால் அவருக்கு அடியவர்களாய் இருந்தவர்கள் அதில் ஒன்றைக் கூட்டவுங் குறைக்கவுந் துணிய மாட்டார்கள். அதினால் அந்த ஆகமமும் மாறுபட்ட

தில்லையென்று அறியலாம்.

இஸ். நீர் அல்லாவுடைய வசனமென்று எடு
த்துக் காட்டிய பழய புதிய ஏற்பாடுகளிலே
ஈசாநபி அல்லாவுக்கும் மனிதருக்கும் ஒப்புர
வுண்டாக்கின தெப்படியென்று சொல்லப்படு
கிறது.

கிறி. அல்லாவுக்கு வேறல்லாதவராகிய ஈசா
நபி மகம்மதுவைப்போலப் புருஷனாலே பிறந்
தவரல்ல ஒரு கன்னிகையிடத்திற் பரிசுத்தாவியி
னாலே உற்பவித்துத் தெய்வீகத்தினுடனே ம
னுஷீகமும் பொருந்திச் சென்ம சுபாவத்தினு
ம் பாவமற்றவராய்ப் பிறந்து அல்லாவுடைய
குமாரனென்று பேர்ப்பட்டிருந்து செத்தவ
ர்களை எழுப்பி வியாதிக்காரரைச் சுகப்படுத்தி
ப் பசாசுகளைத் துரத்தி இப்படியே தாந் தெ
ய்வமென்பதையும் அல்லாவினால் வந்தவரெ
ன்பதையுந் தெளியக் காட்டித் தாமுந் தெய்வ
நேசம் மனித நேசமுடையவராய்க் குற்றமில்
லாமல் நடந்து மனிதரெல்லாரும் அல்லாவி
ன் கட்டளைக்கு அமைந்து நடக்கப் போதித்
து அவர்களுடைய பாவங்களினால் அவர்களு
க்கு வரும் ஆக்கினையைத் தாமே சுமந்து சி
லுவைமரத்தில அறையுண்டு பாடுபட்டு மர
ணம் அடைந்து அடக்கம் பண்ணப்பட்ட மூ
ன்றாம் நாள் உயிர்த்தெழுந்து அநேகருக்குத்
தரிசனையாகி நாற்பது நாட் சென்றபின்பு வா
னத்துக்கு எழுந்தருளி மனிதருடைய பாவத்
தைப் பொறுத்துக்கொள்ளும்படி அல்லாவை
ப்பார்த்து மன்றாடுகிறார். இவ்விதமாக அல்

னவுடைய நீதியைச் சரிக்கட்டி அல்லாவுக்கும் மனிதருக்கும் ஒப்புரவுண்டாக்கினார்.

இனி உலகமுடிவிலே தமது தேவ தத்துவத்துடனே தோற்றி மனிதரெல்லாரையும் உயிர்த்தெழும்பப்பண்ணித் தாஞ் செலுத்தின பலியினாலே பாவ நிவிர்த்தியடைந்து நீதிமான்களாய் இருக்கப்பட்டவர்களை மோட்சத்திற் சேர்த்துக்கொண்டு அவ்விதமாய்ப் பாவ நிவிர்த்தி அடையாத பாவிகளை நரகத்திலே தள்ளிப் போடுவார்.

ஆகையால் நீர் உமது வீண் விசுவாசங்களை விட்டு இந்நாள்வரைக்கும் அவரைப் பற்றிக் கொள்ளாததற்காகவுஞ் செய்து வந்த மற்றும் பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்பட்டுப் பாவத்தை வெறுத்துவிட்டு அவரை நேசித்து அவர் வழியாக அல்லாவைப் பார்த்து மன்றாடி ஈசாநபியை நம்பி அவர் கொடுக்கும் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தத்தையும் பாவ நிவிர்த்தியையும் அடைந்து அல்லாவுடனே ஒப்புரவாகி நரகத்துக்கு நீங்கி மோட்சஞ் சேர விரும்புவீராக.

---

முற்றிற்று.